# மெட்ரோ ரயில் ஓவியம் பள்ளிக்கு பாராட்டு



■ பள்ளி சுவரில் மெட்ரோ ரயில் ஓவியம் வரைய காரணமானவர்களுக்கு, சென்னை மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குனர் பிரதீப் யாதவ், பரிசு வழங்கி பாராட்டினார்.

**சென்னை, அக். 20–**

பள்ளி சுவரில், தத்ரூபமாக மெட்ரோ ரயில் ஓவியம் வரைந்ததற்கு, மெட்ரோ ரயில் நிறுவனம் பாராட்டு தெரிவித்துள்ளது.

சென்னை, எண்ணூர், அன்னை சிவகாமி நகரில் உள்ள, சென்னை மாநகராட்சி தொடக்கப் பள்ளி சுவரில், மெட்ரோ ரயில் ஓவியம், அலுவலக அறையில் மெட்ரோ ரயில் நிலையம் என, தத்ரூபமாக ஓவியம் வரையப் பட்டிருந்தது.

இது குறித்து அறிந்த மெட்ரோ ரயில் நிர்வாக இயக்குனர் பிரதீப் யாதவ், பள்ளி தலைமை ஆசிரியை வெற்றிச்செல்வி, கான்ட்ராக்டர் சரவணகுமார், ஓவியர் சுரேஷ்பாபு ஆகியோரை நேரில் அழைத்து, பரிசு வழங்கி பாராட்டினார்.

இதற்கான நிகழ்ச்சியில், மெட்ரோ ரயில் நிர்வாக அதிகாரிகள் பங்கேற்றனர்.